**தேசிய கல்வி நிறுவகம் - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய கல்வி நிறுவகத்தின் 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், பொழிப்புடனான முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கமைய, எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர, நிறுவகத்தின் 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் விதத்தில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களினது கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனோடு தொடர்புடைய தரப்பினரதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். நிறுவகத்தை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடை நிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய, தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் நிறுவனம்

தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் நடைமுறை தொடர்பான பொறுப்பு குறிப்பிட்ட தரப்பினரதாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய அறிக்கையை வழங்குவது என்பது எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான சான்றுறுதிப்படுத்தலாக இருப்பினும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் போதியளவு தவறான கூற்றுக்களை வெளிப்படுத்துவதற்கான உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடும். இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் மேற்கொள்ளும் பொருளாதாரத் தீர்மானங்களுக்கு தாக்கம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில் துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும்போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளை இனங்காணாமையால் ஏற்படும் தாக்கம் பிரபலமானதாகும். தவறான கூட்டிணைவு, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டைப் புறக்கணித்தல் என்பன மோசடி ஏற்படக் காரணமாகலாம்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவகத்தின் உள்ளக கட்டுப்பாட்டை அறிந்திருந்தபோதும் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வத் தன்மைக்கான அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதற்குக் கருதவில்லை.

- முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் உசிதமான தன்மையையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பாய்வு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமை காரணமாக நிறுவனம் தொடர்ந்தியங்குவது தொடர்பாக போதியளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றினடிப்படையில் கணக்கீடு சம்பந்தமான நிறுவகத்தின்

தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் எண்ணுவதாயின் நிதிக்கூற்றுக்களிலுள்ள அத்தகைய வெளிப்படுத்தல்களுடன் எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டும். அந்த வெளிப்படுத்தல் போதுமானதாக இல்லாதிருப்பின் எனது அபிப்பிராயம் மாற்றத்திற்குள்ளாக வேண்டும். எனது முடிவானது கணக்காய்வு அறிக்கைத் தினம் வரையான கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையிலானவை. எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள், அல்லது நிலைமை காரணமாக தொடர்ந்தியங்கும் தன்மை முடிவுக்கு வரலாம்.

- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் உசிதமானவாறும் நியாயமானவாறும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

இயலுமானவரை மற்றும் தேவையான எச் சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு பரப்பெல்லையும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்குமிடத்து, நிறுவகத்தின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்யக்கூடியவாறு அதன் ஒழுங்கமைப்பு,முறைமை, நடைமுறைகள்,ஏடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமை, நடைமுறைகள்,ஏடுகள்,அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகப் பேணப்பட்டுள்ளனவா என்றும்,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டம் அல்லது தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் சபையால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாட்டிற்கு இணங்க தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் செயற்பட்டுள்ளதா என்றும்,

- நிறுவகமானது தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்றும்,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனுடனும் ஆக்கபூர்வமாகவும் கால வரம்பிற்குள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா என்றும்,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பிடப்பட்ட அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், தொடர்புடைய அறிக்கையிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கீட்டு நடவடிக்கைகளைப் பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களில் பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களித்தகைமையை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் கணக்கிணக்கம் செய்தல் மற்றும் வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்தல் தொடர்பான நியாயமான உறுதிப்பாட்டை பெறுவதற்குப் போதிய‘‘சிறந்த முறையில் திட்டமிடப்பட்ட’’ உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையை நிறுவகம் பேணுதல் அவசியமாகும்.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் வருமானத்தையும் செலவினத்தையும் ஒன்றுடன் ஒன்று ஈடுசெய்யலாகாதெனினும், மீளாய்வாண்டில் செலவினத்தில் ஈடுசெய்யப்பட்ட வருமானம் ரூபா 840,299 ஆகும். | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. திருத்தம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்திற்கேற்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02 இன் பிரகாரம் பணிக் கொடைக்கான நிதி யேற்பாடாகிய ரூபா 72,000, சொத்து விற்பனையான ரூபா 2,023,600 மற்றும் சொத்துக்கள் அகற்றப் பட்டமையால் ஏற்பட்ட ரூபா 840,299 என்பன காசுப்பாய்ச்சல் கூற்றில் குறித்தவாறு காட்டப்படவில்லை. அவ்வாறே, காசுப் பாய்ச்சல் கூற்றுக்கள் உள்ளடங்கிய ரூபா 2,733,570 சீராக்கல் சம்பந்தமாக பட்டோலை ஒன்று கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. திருத்தம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்திற்கேற்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் சொத்துக்களை மீளப் பெறுமதியிடும் போது குறித்த சொத்து வகையிலேயே அவை மீளப் பெறுமதியிடப்பட வேண்டுமாயினும், அதற்கு முரணாக வாகனங்களை மீளப் பெறுமதியிடும் | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. திருத்தம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்திற்கேற்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| போது ரூபா 14,600,000 பெறுமதியையுடைய 04 வாகனங்கள்மீளப் பெறுமதியிடப்படவில்லை. | | |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது காலங்கடந்த திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்த ரூபா 19,826,596 முதலீட்டு வருமானமாகக் கணக்கிலிடப்பட்டமையால் மீளாய்வாண்டினது பற்றாக்குறை அதேயளவு குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. திருத்தம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டிற்கான வருமானத்தைத் தவறில்லாது இனங்காண வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது கல்வி அமைச்சிலிருந்து பெறப்பட்ட ரூபா 103,041,957 மூலதன மானியமானது மீண்டுவரும் வருமானமாகக் கணக்கிலிடப்பட்டமையால் மீளாய்வாண்டினது பற்றாக்குறை அதேயளவு குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | கல்வி அமைச்சு, மூலதனத் தலைப்பு மூலம் வழங்கிய போதும், தேசிய கல்வி நிறுவகத்தின் வரவு, செலவுத் திட்டத்தின் படி மீண்டுவரும் வருமானமாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. | தவறில்லாது கணக்கிலிடப்படு வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.4 கொடுப்பனவு செய்யப்பட வேண்டியன

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்கொண்டு வரப்பட்டவாறிருந்த 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்பாகிய ரூபா 1,887,031 தீர்வு செய்யப்படாது அல்லது பொறுப்புக்கூற வேண்டிய காலம் கடந்த வைப்பாக வருமானத்தில் எதிரீடு செய்யப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது. | எதிர்வரும் ஆண்டில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதிகள் வருவாயிலிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | தீர்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2006 முதல் 2015 வரை கொடுப்பனவு செய்ய வேண்டிய ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் தண்டப்பணமாகிய ரூபா 68,757,865 பேணப்பட்டு இறுதியிலும் தீர்வு செய்யப்படாதிருந்தது. | மேன்முறையீட்டின் மூலம் தவணைக் கொடுப்பனவு வழங்குவதற்கான கோரிக்கையை நிறுவகம் விடுத்துள்ளது. | தீர்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1985 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய கல்வி அதிகாரச் சட்டத்தின் 4(க) மற்றும் 28 ஆம் பிரிவுகள் | நிறுவகத்தின் நிர்வாக மற்றும் நிதிப் பிரமாணக் கோவையானது அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய அங்கீகரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அங்கீகாரம் பெறப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான அங்கீகாரத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | | |
| (i) | 11 ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவு | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக பிரதிப் பணிப்பாளர் நாயகம் பதவியும் 2 பணிப்பாளர் பதவிகளும் காசாளர் பதவிக்குமென 2015, 2016, 2018, 2019 ஆம் ஆண்டுகளில் பதில் கடமைக்கான நியமனம் வழங்கப்பட்டு படியாக மீளாய்வாண்டின்போது ரூபா 478,128 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | சேவைக்கான தேவையின் நிமித்தம் இப்பதில் கடமை நியமனங்கள் வழங்கப்பட்டன. பணிப்பாளர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை தற்போது திருத்தம் செய்யப்பட்டவாறுள்ளன . புதிதாக ஆட்சேர்ப்பு நடைபெறும். | இப்பதவி வெற்றிடங்கள் துரிதமாக நிரப்பப்பட வேண்டும். |
| (ii) | VIII அத்தியாயத்தின் 6.1 ஆம் பிரிவு | மாதாந்த கொடுப்பனவு சம்பளத்தின் (படி நீங்கலாக) அடிப்படையில் மேலதிக நேர வேலைக் கொடுப்பனவு ரேட் கணிக்கப்பட | 1995 மார்ச் 22 ஆந் திகதிய உதவி தொழில் ஆணையாளரது கடிதத்தின் | மேலதிக நேர வேலைக் கொடுப்பனவுக்கான அடிப்படையாகக் கொள்ளப்படும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வேண்டுமாயினும், 1995 மார்ச் 22 ஆந் திகதிய டீ/எஸ்/811/617/96 ஆம் இலக்க உதவி தொழில் ஆணையாளர் ஒருவரது அறிவுறுத்தல் கடிதத்தின் அடிப்படையில் 2016 முதல் மொத்தச் சம்பளத்தின் அடிப்படையில் மேலதிக நேர வேலைக் கொடுப்பனவு கணிக்கப்பட்டு மீளாய்வாண்டில் ரூபா 37,226,200 மேலதிக நேர வேலைக் கொடுப்பனவாக வழங்கப்பட்டுள்ளது. எனினும், மேலதிக நேர வேலைக் கொடுப்பனவை மேற்கொள்வதற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட சம்பளமானது நிறுவகத்தின் நிர்வாக மற்றும் நிதிக் கோவையில் உள்ளடக்கப்பட்டு முறையாக அங்கீகரிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அடிப்படையில் மேலதிக நேர வேலைக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ள தென்றும் சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களம் என்பவற்றில் கேட்டறிந்து உதவித் தொழில் ஆணையாளரது அறிவுறுத்தலுக்கு இந்நிறுவகம் எதிர்ப்பு தெரிவிக்காது என அறிவிக்கப்பட்டுள்ளது. | சம்பளம் நிறுவகத்தின் நிர்வாக மற்றும் நிதிச் சேவையில் உள்ளடக்கப்பட்டு முறையாக அங்கீகரிக்கப்பட வேண்டும். |
| (iii) | திறைசேரியின் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் ஊடாக 2013 ஆம் ஆண்டில் நிறுவகத்திற்கென அங்கீகரிக்கப்படும் 257 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக 2014 தொடக்கம் 2018 வரை 89 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 6,756,256 மற்றும் மீளாய்வாண்டின் போது 09 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 505,915 என கூடுதலாக படி வழங்கப்பட்டிருந்தபோதும், அதற்கான திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படவில்லை. | முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திற்கு அறிவித்து இச்சுற்றறிக்கையைத் திருத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சுற்றறிக்கைப் பிரகாரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | 2010 செப்டம்பர் 06 ஆந் திகதிய 19 ஆம் இலக்க மற்றும் 2017 மார்ச் 15 ஆந் திகதிய 33 ஆம் இலக்க மேலதிகங்களின் | வாகனப் பழுதுபார்த்தல் ரூபா 200,000 க்கு அதிகப்படின் வரிசை அமைச்சின் செயலாளரது அங்கீகாரம் பெறப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டில் 07 சந்தர்ப்பங்களில் | பொருட் கொள்வனவு குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டதன் பின்னரே வாகனங்கள் பழுது பார்க்கப்பட்டுள்ளன. | பொருட் கொள்வனவு வழிகாட்டிக்கமைய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| மூலம் திருத்தப் பட்டவாறான அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 9.3.1(ஆ) பிரிவு | அமைச்சினது செயலாளரின் அங்கீகாரமின்றி வாகனங்களைப் பழுதுபார்ப்பதற்கு ரூபா 2,861,623 வழங்கப்பட்டிருந்தது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிறுவகத்தின் நிதிப் பெறுபேறு ரூபா 41,340,476 பற்றாக்குறை ஆகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 69,346,117 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேற்றில் ரூபா 110,686,593 குறைவு ஆரம்பிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் மீண்டுவரும் வெளிநாட்டு மானியங்கள் ரூபா 344,084,500 குறைவடைந்தமை மேற்படி நலிவுக்கான பிரதான காரணியாகும்.

### 2.2 விகிதப் பகுப்பாய்வு

நிறுவகத்தின் தொழிற்பாடு மூலதன முகாமைத்துவம் கருத்திற் கொள்ளப்படுமிடத்து, முன்னைய ஆண்டின் 3.5:1 நடைமுறை விகிதமானது மீளாய்வாண்டில் 3.4:1 ஆகவிருந்ததுடன் துரித சொத்து விகிதம் முன்னைய ஆண்டில் 3.3:1 ஆகவும் மீளாய்வாண்டில் 3.2:1 ஆகவும் இருந்தது. நடைமுறைச் சொத்துக்களில் 80 சதவீதமானவை திறைசேரிப் பிணைமுறி மற்றும் வங்கி நடைமுறைக் கணக்கு மீதி ஆவதுடன், அதற்கமைய பெருமளவு சொத்துக்கள் திரவவியல் சொத்துக்களில் உள்ளடங்கியுமிருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) உயர்தர ஆசிரியர்களுக்கு நடாத்தப்படும் கல்விமானி (பொறியியல் தொழில்நுட்பம்) பட்டப்படிப்புக் கற்கைநெறியினது சாஸ்தீரிய பாடங்களுக்குரிய விரிவுரை மற்றும் பிரயோக கூட்டத்தொடரை நடாத்துவதற்கு புரிந்துணர்வு உடன்படிக்கை இல்லாது தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்திடம் 2015 | பல்கலைக் கழங்கள் 04 இன் அதிகாரிகளுடன் கலந்துரையாடி உடனடியாக இது தொடர்பாக புரிந்துணர்வு உடன்படிக்கையை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், கற்கை நெறிகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்யாத ஆசிரிய மாணாக்கர் சம்பந்தமாக ஆராய்வதற்கும் குழு ஒன்றும் நியமிக்கப்படும். | உடன்படிக்கையில் துரிதமாகக் கைச்சாத்திட்டு கற்கை நெறிகளிலிருந்து நீங்கிய ஆசிரிய மாணாக்கரிடம் அரசின் செலவினம் மீண்டும் அறவிடப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் ஆண்டில் ஒப்படைக்கப்பட்டிருந்த போதும் 2017 ஆம் ஆண்டில் அந்நிறுவனம் விரிவுரைகளைக் கைவிட்டிருந்தது. மீண்டும் உடன்படிக்கையில்லாது அந்த 211 ஆசிரிய மாணாக்கரும் 04 பல்கலைக்கழகங்களுடன் தொடர்புபடுத்தப்பட்டு கற்கை நெறிக் கட்டணாக ரூபா 52,444,398 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே, கற்கை நெறிகளிலிருந்து விலகிய ஆசிரிய மாணக்கருடனும் உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்படாததால் 04 பல்கலைக்கழகங்களுக்குக் கொடுப்பனவு செய்யப்பட்ட 96 பேரினது கற்கை நெறிக்கட்டணமாக ரூபா 22,644,843 மீண்டும் அறவிடப்பட முடியாதிருந்தது. | | |
| (ஆ) | 2009 தொடக்கம் 211 வரையான காலப்பகுதிகளின் போது 131 உத்தியோகத்தர்களுக்குக் கூடுதலாக வழங்கப்பட்ட சம்பளமாகிய ரூபா 2,345,269 மீளாய்வாண்டு இறுதியிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை இன்றியிருந்தது. | தொகையை அறவிடுவதற்கான திருத்தம் செய்யப்பட்ட பெயர்ப் பட்டியல் நிதிப் பிரிவால் தயாரிக்கப்பட்ட வாறுள்ளது. | துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2008 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே உள்ள ரூபா 45,034,652 பெறுமதியான நூலகப் புத்தகங்களை நேரடியாகச் சரி, பிழை பார்த்திராததுடன், அவற்றின் பட்டோலையும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | புத்தகங்களின் கணிப்பு நடைபெறுவதுடன், நூலகப் புத்தகங்கள் சம்பந்தமாக தவறில்லாத தரவுகள் அடங்கிய புத்தகங்களது விலைகளுடன் கூடிய பட்டோலை தயாரிக்கப்பட்டு நிதிப் பிரிவில் கையளிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | அந்நூலகப் புத்தக மீதியைக் கணிப்பிட்டு பெறுமதியைக் கணக்கிலிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 பொருட் கொள்வனவு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| உடன்படிக்கைப் பிரகாரம் மீமூம் தெற்கு ஆசிய ஆசிரியர் அபிவிருத்தி நிலைய விடுதியை நிர்மாணிக்கும் ஓராண்டு ஒப்பந்த காலம் பணிப்பாளரால் (பாடசாலைக் கட்டிடம்) பொருட் கொள்வனவு வழிகாட்டலுக்கமைய ஒப்பந்தக்காரரது கட்டுப்பாட்டுக்கு அப்பால் நடைபெற்றதால் தாமதமாகியதை உறுதி செய்யாது 2019 டிசம்பர் 15 வரை காலநீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. 2020 யூன் 30 ஆந் திகதியளவிலும் ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்படாதிருந்தது. | இந்த ஒப்பந்தத்தை இரத்துச் செய்து வேறொரு ஒப்பந்தகாரருக்கு வழங்கினால் மேலதிக காலமும் கிரயமும் ஏற்படுமாதலால் கால நீடிப்பு வழங்கப்பட்டது. | அங்கீகரிக்கப்பட்ட காலத்தினுள் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிறுவகத்தின் 159 வெற்றிடங்களை நிரப்புவதற்கு மீளாய்வாண்டு இறுதியிலும் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது. | 2013 மார்ச் 01 தொடக்கம் அமுலாகிய ஆட்சேர்ப்பு நடைமுறைக்கமைய வெற்றிடங்களை நிரப்புவதற்கு இயலாது உள்ளமை அநேக பதவிகளுக்கான தகைமைகள் அதிகரித்துக் கோரப்பட்டுள்ளமை காரணமாகவே. | ஆட்சேர்ப்பு நடைமுறையைத் திருத்தி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட மீண்டுவரும் செலவினத்தை உள்ளவாறானவற்றுடன் ஒப்பிடுகையில் 3.9 சதவீதம் முதல் 264.3 சதவீதம் | இந்நிலைமையைத் தவிர்ப்பதற்குத் தேவையான எதிர்கால நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | வரவு, செலவுத் திட்டத்தைத் தயாரிக்கையில் வருடாந்தம் நிறைவேற்றப்பட வேண்டிய |

வரையிலான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டது.
இதனால் வரவு, செலவுத் திட்டமானது ஆக்கபூர்வ முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

முன்னுரிமைகளை சரிவர இனங்கண்டு எதிர்பார்த்தவாறு அக்காலப்பகுதிக்குள் அவற்றை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.